**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO I, SATTUR**

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. CC.49/2025 |
| Preliminary Register | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw-2 |
| Deposition of witness for | Defence |
| | Court |

Name : திரு.ஹரிராம் (சார்புஆய்வாளர்)

Father's Name :

Village :

Taluk :

Age :

எதிரி ஆஜர்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

16.06.2026

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்பொழுது இராஜபாளையம் உட்கோட்டம் சேத்தூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.10.2024 ம் தேதி 16.30 மணிக்கு ஏழாயிரம்பண்ணைகாவல் நிலைய சார்பு ஆய்வாளராகிய நான் மதுவிலக்கு குற்ற தடுப்பு சம்மந்தமாக பணியில் இருந்தபோது என் தலைமையில் முதல் நிலை தலைமைகாவலர் 2067.திரு.ஜோஸ்ராஜாமான்சிங், தலைமைக்காவலர் திரு.சங்கர்கணேஷ் ஆகிய போலீஸ்பார்டிகள் சகிதம் மதுவிலக்கு தடுப்பு சம்மந்தமாக ரோந்து சென்ற போது ஏழாயிரம்பண்ணை காவல் நிலைய சரகத்தில் ரோந்து செய்த போது பழைய ஏழாயிரம்பண்ணை ஏமராஜன் கோவில் அருகே வைத்து பின்னர் பெயர் விலாசம் கேட்டுத்தெரிந்த ஓ.முத்துச்சாமிபுரம் தெற்கு தெருவினை சேர்ந்த கந்தசாமியின் மகன் முனியசாமி என்பவர் எமராஜன் கோவில் அருகே வைத்து இவ்வழக்கின் எதிரி அரசின் உரிமமோ, அனுமதியோ இல்லாமல் 650 ML அளவு கொண்ட SNJ 10000 Deluxe Super

Strong Beer Bottle –5 எண்ணம் மற்றும் 180 ML அளவு கொண்ட One Man Army XXX Rum Bottle –5 எண்ணம் மதுபாட்டில்களை சுய லாபம் கருதி கூடுதல் விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்த குற்றத்திற்காக எதிரியை கைது செய்து அத்தாட்சி தயார் செய்து சொத்தை கைப்பற்றி எதிரி மற்றும் சொத்துக்களோடு 18.00 வந்து நிலைய குற்ற எண்.127/2024 பிரிவு– 4(1)(C ) of TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையானது **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை அசலை அத்தாட்சியோடு இணைத்து கனம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம், சாத்தூருக்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

பின்னர் வழக்கின் எதிரியை திரேக பரிசோதனை செய்து நிலைய பாரா வசம் ஒப்படைத்தேன். இவ்வழக்கினை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் 1, 2 ஐ விசாரணை செய்து சாட்சிகளிடம் தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் நகல்களை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். சாட்சி 1, 2 ஐ இவ்வழக்கின் சம்பவம் பற்றியும், அத்தாட்சி பற்றியும், வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தது பற்றியும் கூறினார்கள்.

மேற்படி அத்தாட்சியில் கைப்பற்றிய 650 ML அளவு கொண்ட SNJ 10000 Deluxe Super Strong Beer Bottle –5 எண்ணம் மற்றும் 180 ML அளவு கொண்ட One Man Army XXX Rum Bottle –5 ஆகியவற்றை படிவம் 91 மூலமாக கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். படிவம் 91 ஆனது **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 650 ML அளவு கொண்ட SNJ 10000 Deluxe Super Strong Beer Bottle –5 **சா.பொ.1** ஆகவும், 180 ML அளவு கொண்ட One Man Army XXX Rum Bottle –5 **சா.பொ.2** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

இவ்வழக்கானது பிணையில் விடக்கூடிய வழக்கு என்பதாலும், நிலைய பிணையில் கனம் நீதிமன்றம் அழைக்கும் போது தவறாமல் ஆஜராக வேண்டும் என்ற நிபந்தனையோடு எதிரியை விடுவித்தேன். எனது விசாரணையில் இருந்தும் சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்தும் 02.10.2024ம் தேதி 16.30 மணிக்கு இவ்வழக்கின் எதிரி பழைய ஏழாயிரம்பண்ணை ஏமராஜ்கோவிலின் அருகே வைத்து எந்த அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் எண்ணம் மற்றும்650 ML அளவு கொண்ட SNJ 10000 Deluxe Super Strong Beer Bottle –5 எண்ணம் மற்றும் 180 ML அளவு

கொண்ட One Man Army XXX Rum Bottle –5 எண்ணங்களை விற்பனைக்காக வைத்திருந்த குற்றம் உண்மையென தெரியவந்ததல் எதிரி மீது பிரிவு 4(1) (C) of TNP Act ன் கீழ் குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

ரோந்துபணிக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 04.00 மணிக்கு சென்றோம். எங்கள் காவல் நிலையத்தில் இருந்து சம்பவ இடம் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 3 கி.மீட்டர் தூரம் இருக்கும். சம்பவ இடத்திற்கு வருவதற்கு முன்பாக எங்கு எங்கு ரோந்து பணியில் ஈடுபட்டோம் என்றால் ஏழாயிரம்பண்ணை பஜாரில் ஈடுபட்டோம். எவ்வாறு சென்றோம் என்றால் நானும், தலைமை காவலரும் ஒரு வாகனத்திலும் உடன் இருந்தவர் மற்றொரு வாகனத்திலும் தனித்தனியாக சென்றோம். சம்பவ இடமானது பொதுமக்கள் நிறைந்த இடம் என்றால் ஆட்கள் நடமாட்டம் அதிகமாக இல்லாத இடம்.

கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் எந்த மதுபானக்கடையில் இருந்து வாங்கப்பட்டதென்ற விவரத்தினை விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. எவ்வளவு மதுபான பாட்டில்கள் வாங்கப்பட்டது விற்கப்பட்டதென்பது குறித்து விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் இருந்திருப்பேன் என்றால் சுமார் ½ மணி நேரம் இருந்திருப்பேன். சம்பவ இடத்தினை காட்டக்கூடிய பார்வை மகசர் மற்றும் வரைபடம் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தமிழ்நாடு மதுபான சட்ட உரிமைவிதிகளின் படி ஒருதனிநபர் 4 ½ லிட்டர் ம துபான பாட்டில்களும், 7.8 லிட்டர் பீர் பாட்டில்களும் வைத்துக்கொள்ளலாம் என்ற விதி குறித்து எனக்கு தெரியுமா என்றால் 4 1/2 மதுபானம் வைத்துக்கொள்ளலாம் என்ற விதி குறித்து மட்டும் தெரியும். அத்தாட்சியில் எதிரியிடம் கையொப்பம் பெற்றேனா என்றால் இல்லை.

நான் சொன்ன நாள் நேரத்தில் இடத்தில் ரோந்து பணி செய்யவில்லை என்றும் அத்தாட்சியானது பின்னிட்டு காவல் நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்டதென்றும், முதல் தகவல் அறிக்கையானது சொன்ன நான் சொன்ன நாள் நேரத்தில் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அத்தாட்சி தயார் செய்யும் போது தனிநபர்கள் யாரும் கையொப்பம் செய்யவில்லை என்று கூறியுள்ள நிலையில் அவர்கள் யார் யார் என்று விசாரித்து தெரிந்துகொண்டேனோ என்றால் இல்லை. நான் சொன்ன நாள்

நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடம் இருந்து எந்த வித வழக்கு சொத்துக்களும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சாட்சிகள் அனைவரும் காவல் துறையை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளனே் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.